ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசொலி

~வார இதழ்~

முரசு 5 | 6-6-58 | வெள்ளி | ஒலி 8

தொடர்கிறது, தோல்விப் படலம்!

"காங்கிரசின் சார்பில் ஒரு கழுதையை நிறுத்திவைத்தாலும் வெற்றி நிச்சயம்!"—என்று கொக்கரித்தனர், காங்கிரஸ் இயக்கத்தினர் அன்று!

"குவிகின்ற ஓட்டு தனிப்பட்ட நபரின் செல்வாக்கிற்காக அல்ல; கொள்கைக்கு! காங்கிரஸ் இயக்கத்தின் புனிதத் தன்மைக்கு!..." என்று கட்சியின் களங்கமற்ற தன்மைக்கு வக்காலத்து வாங்கினார்கள் அன்று!

ஆனால் இன்று...?

கால வெள்ளத்தின் வேக ஓட்டத்தில் கரைந்து வரும் காங்கிரஸ் இயக்கம் தோல்விகள் பலவற்றைச் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ஆளாகிவிட்டது!

இந்திய உபகண்டத்தின் தென் கோடியில்—கேரளத்திலே சென்ற திங்கள் காங்கிரஸ் பெற்ற தோல்வியை அல்ல இங்கே குறிப்பிடுவது! மந்திரிமார்கள் பலர் அங்கேயே முற்றுகையிட்டு, புயல் வேகத்திலே பிரச்சாரம் செய்தும்—காங்கிரசின் முகத்திலே கரி பூசிவிட்டார்களே காலத்தையும், காங்கிரசின் இழிந்த கோலத்தையும் கண்டுகொண்ட மக்கள்—அதை மட்டும் குறிப்பிடவில்லை!

இப்போது அந்தத் தோல்விப் பட்டியலில் புதியதோர் கட்டம், இந்தியாவின் வடகோடியில்—பஞ்சாபில் காங்கிரஸ் பெற்றிருக்கிற தோல்வி, வளர்ந்து வரும் காங்கிரஸ் எதிர்ப்பை பகிரங்கமாக பறைசாற்றுகிறது!

அபுல்கலாம் ஆசாத்—காங்கிரசின் முதுபெரும் கிழவர்களின் ஒருவர்—காந்தியாருக்கு அடுத்த பழைய தேசியத் தலைவர்—பத்தாண்டு காலம் ஆடாமல் அசையாமல மத்திய மந்திரி சபை நாற்காலியில் நிரந்தர இடத்தைத் தேடிக்கொண்டவர்—அந்தப் பெரியவர் சென்ற தேர்தலில் வெற்றி பெற்ற தொகுதியில் மீண்டும் உபதேர்தல் நடைபெற்றது, அவர் மறைந்துவிட்ட காரணத்தால்!

ஆசாதின் தொகுதியல்லவா அது; கூசாமல் சொல்லிவிடலாம்; வெற்றி காங்கிரசிற்குத்தான்—என்று மேலிடமும் நம்பிக்கொண்டிருந்தது!

அந்த நம்பிக்கைக்கு ஆழமான அடித்தளமும் இருந்தது. ஏனெனில் சென்ற தேர்தலில் ஆசாத் அத்தொகுதியில் வெற்றி பெற்றார்! சாதாரணமாக அல்ல; 95,000 ஓட்டுகள் அதிகமாகப் பெற்று அடைந்த வெற்றி அது!

இடையில் பதினாறு மாதங்கள்!

மீண்டும் உபதேர்தல் நடந்திருக்கிறது!

காங்கிரஸ் வளருகிறது; அதன் புனிதத்தன்மைக்கு மக்கள் மன்றத்தில் வரவேற்பு குவிகிறது—என்பதுதான் உண்மை நிலை என்றால், அந்த வெற்றியின் அளவு உயர்ந்தல்லவா இருக்கவேண்டும்?

ஆனால், இப்போது நடைபெற்றது என்ன? காங்கிரஸ் கிட்டத்தட்ட 1 33 000 ஓட்டுகளைப் பறிகொடுத்துவிட்டது!

ஆசாத்தை பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைத்த அதே தொகுதியில்—காங்கிரசிற்கு வாகை சூடி வரவேற்பு தந்த அதே மக்கள்—இந்தத் தேர்தலில் திசை மாறிவிட்டார்கள்!

காங்கிரஸ் மூக்கறுபட்டு—முகத்திலே கரிபூசப்பட்டு—மூக்காடிட்டு—மூலைக்குத் துரத்தப்பட்டுவிட்டது!

ஆமாம்; காங்கிரஸ் அபேட்சகர் தோற்கடிக்கப்பட்டார்! சாதாரணமாக அல்ல; 38,000 ஓட்டுகள் வித்தியாசத்தில் மாபெரும் தோல்வியை அடைந்தார்! காங்கிரசின் சீரழிவு கண்டு, சிந்தை குலைந்த மக்கள் சுயேச்சை அபேட்சகர் ஒருவரின் வெற்றிக்கு வழியமைத்துக் கொடுத்துவிட்டார்கள்!

இந்தத் தோல்விக்கு வழக்கம்போல் விளக்கம் தர வந்த மேலிடம், "அங்கு நிறுத்தப்பட்ட காங்கிரஸ் அபேட்சகர் தகுதியற்றவர். அதனால்தான் தோல்வி ஏற்பட்டுவிட்டது!" என்று சமாதானம் கூறியிருக்கிறது.

அப்படியானால் காங்கிரசிலே ஒரு தொகுதிக்குக்கூட தகுதியான ஆள் இப்போது கிடைக்கவில்லை என்றுதானே பொருள்!

"காங்கிரசின் சார்பிலே ஒரு கழுதையை நிறுத்தினாலும் வெற்றி நிச்சயம்!"

"மக்கள் தரும் வரவேற்பு தனிப்பட்ட நபரின் செல்வாக்குக்காக அல்ல; கொள்கைக்கு! காங்கிரஸ் இயக்கத்தின் புனிதத் தன்மைக்கு!"

—இப்படி ஒரு காலத்தில் சீரோடும் சிறப்போடும் பேசப்பட்ட காங்கிரசின் பெருமை, இன்று பொலிவிழந்து—வலுவிழந்து—குலைந்து நொண்டே இருக்கிறது!

அதன் அறிகுறிதான் இந்தத் தோல்விப்படலங்கள்! இனி அது தொடரத்தான் போகிறது! ஃ

மீண்டும் ரயில் விபத்து—முப்பது பேர் மாண்டனர்—அரசாங்கமோ வழக்கம்போல் அனுதாபம் தெரிவித்து, தன் கடமையைத் தீர்த்துக்கொண்டது!

—'சங்கர்ஸ் வீக்லி'

ஏழையர் இயக்கத்தினர் இன்று பொருள் குவிக்கும் பாதை கண்டார்!

சொந்த வாழ்க்கையைச் சுருக்கிக் கொண்டோர்—

பந்தம் பாசத்தை உதறித் தள்ளியோர்—

நாட்டு விடுதலைக்குத் தலையைக் கொடுக்கவும் தயார் என்று புறப்பட்டோர்—

இப்படிப்பட்டோர் காங்கிரஸ் இயக்கத்தில் மிகுந்து கிடந்தார்கள். தூய நற்பணிக்காக அது துவக்கப்பட்டது என்று சொல்லப்பட்ட நேரத்தில்!

ஆனால் விடுதலைக்குப் பின்?...

சுயநலமிகளும், மிரட்டிப் பணம் பறிக்கும் வழிக் கொள்ளைக்காரனினும் கேவலமான சுரண்டல்காரர்களும், பதவியைப் பாழான வழிக்குப் பயன்படுத்திப் பலனடையும் துரோகிகளும் மலிந்து விட்டார்கள்!

"நமக்குச் சுதந்திரம் வேண்டும். ஆனால் சுதந்திரம் மட்டும் போதுமா? அதைவிட இன்னும் அதிகம் வேண்டும். நெடுநாள் பாசி நிறைந்து நீர் தேங்கி நிற்கும் குட்டைகளின் நாற்றம் மூக்கைத் துளைக்கிறது. துர் நீரையெல்லாம் இறைத்துப் போக்கி விட்டு எங்கும் தூய தண்ணீர் கொணர்ந்து விடவேண்டும். நாட்டின் அழுக்கைக் கழுவ வேண்டும்..."

—நாட்டு விடுதலைக்குப்பின் நாட்டின் செழிப்புக்கு ஆற்ற வேண்டிய பெரும்பணி குறித்து நேருபிரான் 1930-ம ஆண்டில் தன் மகளுக்கு மேற்கண்டபடி எழுதியிருக்கிறார்.

உயர்ந்த எண்ணம்தான் — ஆனால் எழுத்து வடிவிலே மட்டும்தான் காண முடிகிறதே தவிர, அதை செயலாக்கிக் காட்டும் வலிமை இன்றைய காங்கிரசிடம் இல்லை!

பாசி படிந்து தேங்கிய நீரை அப்புறப்படுத்த வேண்டும் என்றார், அவர்!

ஆனால், இன்றோ, நீர் சாக்கடையாகி—நச்சுப் பூச்சிகள் பலவற்றை உற்பத்தி செய்து—நாடாள வந்தோரை அவமானச் சின்னங்களாக நாட்டுக்கு அறிமுகப்படுத்துகிறது!

'ஏழையர் இயக்கம்' என்று பட்டயம்பொறித்துக் கொண்ட அதிலே இன்று கோணல் வழியிலே பொருளீட்டும் கோடீஸ்வரர்கள் மலிந்து விட்டார்கள்!

அவர்களது இந்த 'செழிப்'பு'க்கு ஆட்சி பீடத்திலே இருப்போர் எப்படிப் பயன்படுகிறார்கள் என்பதை ஆதாரத்தோடு பம்பாயிலிருந்து வெளி வருகின்ற மராத்திய தினசரி ஒன்றில் அதன் ஆசிரியர் பி. கே. ஆத்ரே எழுதியிருக்கிறார். அதைக் கீழே தருகிறோம்:

"மக்கள் சபையின் முன்னாள் சபாநாயகர் ஜி. வி. மவ்லங்கர் இறந்த பொழுது, அவருக்கு 90 லட்சம் ரூபாய் சொத்து இருந்ததாம். தன்னலமற்ற சேவைக்கு உடல், பொருள், ஆவி எல்லாம் அர்ப்பணம் செய்து விட்டதாகக் கூறப்படும் இப்படிப்பட்டவர்களுக்கு இத்தனை பெரிய அளவு செல்வம் சேர்ந்திருப்பதன் மர்மம் என்ன?

காந்திலால்தேசாய் மொரார்ஜி தேசாயின் மகனுவார். அவருக்கு வயது முப்பதுக்கு மேலிருக்கும். ஆயினும் இதற்குள் அவர் ஒரு லட்சாதிபதியாகி விட்டார்!

ஐந்தாண்டுகளுக்கு முன்னால் இவர் டாட்டா கம்பெனியில் மாதம் ரூ. 150 சம்பளம் பெறும் ஒரு ஊழியராக இருந்தார். இப்போது இவரது மாத வருமானம் ஐந்து இலக்கங்களைத் தாண்டிவிட்டது.

'நியூ இந்தியா லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி'யில் ஒரு 'கான்வாசரா'கச் சேர்ந்த நாள் தொட்டு காந்திலால் ஒரு பெரும் புள்ளியாகிவிட்டார். மொரார்ஜிக்கு மகிழ்ச்சி யூட்ட வேண்டும் என்ற நோக்கமுள்ள பலர் காந்திலாலின் விருப்பப்படி இன்ஷூரன்ஸ் பாலிசிகள் எடுக்கலாயினர். கமிஷனாக அவருக்கு லட்சக் கணக்கில் பணம் புரண்டது.

இந்தப் பணத்தில் பெருந்தொகை மொரார்ஜி தேசாயின் மகள் பெயரில் சேர்த்து வைக்கப்பட்டிருந்ததாம். இந்த மகள் பின்னால் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது. அவள் பெயரிலிருந்த சொத்துக்கள் என்னவாயின என்பது தெரியவில்லை.

பின்னால் காந்திலால் 'பம்பாய் ஜெனரல் டிரேடர்ஸ்' (பிரைவேட் லிமிடெட்) என்ற பெயரால் ஒரு கம்பெனி தொடங்கினார். தமக்குக் குடியிருக்கவும் ஆபீஸ் நடத்தவும் வேண்டி பம்பாய் 'மெரைன் டிரைவ்'வில் 'ஏஷியானா' என்ற ஐந்தடுக்கு மாளிகையை அவர் வாடகைக்கு அமர்த்தினார். மொகலாய சக்கரவர்த்திகள்கூடப் பெருமைப்படும் ராஜ மாளிகையாகும் அது.

அந்தக் கட்டிடத்திற்கு உபகரணங்கள்—அலங்கார அணிகளுக்காக ஒன்றரை லட்சம் ரூபாய் அவர் செலவழித்தார்.

ஏஷியானா மாளிகையின் சுல்தான் என்று காந்திலாலை அவரது நண்பர்கள் அழைத்து வந்தார்கள் என்றால் அந்த மாளிகையின் ஆடம்பர அட்டகாசங்களை வர்ணிப்பானேன்!

மொரார்ஜி அடிக்கடி பம்பாய் செல்வார். பம்பாய்க்கு விஜயம் செய்யும்போதெல்லாம் மகனுடைய மாளிகையில் தங்குவதுண்டு. தந்தையைத் திருப்திப் படுத்துவதற்காக மாளிகையில் ஓர் அறையை மட்டும் கதர் மயமாக வைத்திருந்தார் காந்திலால்.

பம்பாயிலுள்ள பிரபல தொழிலதிபர்கள், ஆலையரசர்கள், வர்த்தகர்கள் வரிசையில் காந்திலால் இடம் பெற்றுவிட்டார். அவரது முக்கியமான வர்த்தகம், பம்பாய் பஞ்சாலைகளுக்கு யந்திரத் தளவாடங்கள் சப்ளை செய்வது. குவாலியரிலுள்ள பிர்லா மில் இப்போது காந்திலாலின் உடமை.

'ஷா கன்ஸ்ட்ரக்ஷன்' (பிரைவேட லிமிடெட) என்ற கம்பெனியில் காந்திலாலுக்கு 18 சத விகிதம் பங்குண்டு. பம்பாய் அரசாங்க செக்ரடேரியட் கட்டிட நிர்மாண வேலைகள் இந்தக் கம்பெனிகளுக்கே காண்ட்ராக்ட் விடப்பெற்றுள்ளன. மகாராஷ்டிரத்திலேயே மிகப் பெரிய அணைக்கட்டான கொயினா அணைக்கட்டுத் திட்டமும் இந்தக் கம்பெனிக்கே கிடைத்தது! கோடிக்கணக்கில் பணம் புரளும் ஒரு வேலை இது!

அண்மையில் காந்திலால் மேற்கு ஜெர்மனிக்கு ஒரு வர்த்தகத் தூதுகோஷ்டியுடன் சென்று வந்தார். அங்கு அவர் தாம் 'வருங்கால இந்தியப் பிரதமரின் மகன்' என்று பொருள்படும் வண்ணம் சண்டப்பிரசண்டங்கள் செய்திருக்கிறார். அவ்வாறு தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டாராம்.

அப்போது 'ஏர்கண்டிஷன்' செய்த ஒரு கார் அவருக்குப் பரிசாகக் கிடைத்தது.

'விப்ஜியர்' என்ற ஒரு தனியார் கம்பெனியின் நிர்வாகமும் இப்பொழுது காந்திலாலிடம் இருக்கிறது. 'சராயபாய் ரசாயனத் தொழிற்சாலை'யில் இவர் ஒரு பங்குதாரர். ஸ்டாண்டர்ட் வாகுவம் கம்பெனியும், 'வருங்காலப் பிரதமர் மகனை' சந்தோஷப்படுத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்துள்ளது. பம்பாய் சர்க்கார் அதிகாரிகளுக்கும் ஸ்டாண்டர்டு வாகுவம் கம்பெனி அதிகாரிகளுக்கும் சலுகைகள் அளிக்க காந்திலாலுக்கு என்றும் ஆசை உண்டு.

முந்திரா ஊழல் நாடகங்கள் பலவும் அவரது 'ஏஷியானா' மாளிகையில் நடந்தன என்றும் கூறப்படுகிறது!"

சிக்கன சிற்பிகளின் தார்பார்—நிதி அமைச்சரின் செல்ல மகன் பணம் குவிக்கப் பாதை அமைத்தக் கொடுமையை என்ன வென்பது?

தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாடு

1958, ஜூன் திங்கள் 7, 8 நாட்களில்

விருத்தாசலத்தில் நடைபெறும்.

★

தலைவர்:

மதுரை எஸ். முத்து

★

திறப்பாளர்:

கே. கே. நீலமேகம்

அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்து கொள்வர்.

இசைமுரசு நாகூர் அனிபா இன்னிசை,

அறிஞர் அண்ணா தலைமையில்

செல்வி மல்லிகா நடனம் உண்டு.

கட்டணம்:— ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரூ. 1.

வெள்ளி 6-6-58 சென்னை

பழுதான இயந்திரம்!

“பிறந்தாலும் காங்கிரஸ் அமைச்சர்களுக்குச் சொந்தக் காரர்களாக இருக்கவேண்டும்! இல்லாவிட்டால் பிறக்காமலேயே இருக்கவேண்டும்”

— இப்படிப் பாமர மக்களிடையே நம்பிக்கை ஒன்று உருவாகிவிட்டது.

உண்மையான திறமைக்கு மதிப்பிருப்பதாகத் தெரியவில்லை. கொல்லைப்புற வழியில் நுழைவதற்கான திறமைக்குத்தான் முதல் ‘மார்க்’ கொடுக்கப்படுகிறது, காந்தி சீடர்களது துரைத்தனத்தில்!

ஒவ்வொரு மாநிலத்து நிர்வாகத்துக்குப் பின்னால் நிவாரணம் செய்யவே முடியாத தவறுகள்தான் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கின்றன.

உதாரணமாக, அமெரிக்காவிலிருந்து இங்கு வந்த நிர்வாக நிபுணரான ஆப்பிள்பி என்பார் பீகார் மாநிலத்தின் நிர்வாகத்தை வெகுவாகப் பாராட்டிச் சென்றார். பம்பாய்க்கு அடுத்தபடி அங்குதான் நிர்வாகம் செவ்வனே நடத்தப்படுவதாகப் புகழ்மாலை சூட்டினார்.

ஆனால் அந்த மாநிலமோ ஊழலின் உறைவிடமாகக் காட்சியளிக்கிறது!

அந்த மாநிலத்து முதலமைச்சர் டாக்டர் கிருட்டின சின்னுமீது எதிர்க் கட்சித் தலைவர் சுவீல் குமார பாகே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது குலைநடுங்கும் பல தகவல்களை வெளியிட்டிருக்கிறார். அவைதான் இவை:

“தனது மகனையும், தனது நண்பரின் மகனையும் அப்ரக வியாபாரத்தில் ஈடுபடுத்தி இருக்கிறார் முதலமைச்சர்!”

“அந்த வியாபாரத்தில் முதலமைச்சர் மகன் இப்பொழுது இலட்சம் இலட்சமாகப் பொருளீட்டியிருக்கிறார்!”

“அமைச்சர்களிடையே அரசாங்க அலுவல்களைப் பிரிக்கின்ற பொழுது, அதுவரை நிலவரித் துறையுடன் இணைக்கப்பட்டிருந்த சுரங்கங்கள்—கனிப் பொருள் துறையைத் தனது பொறுப்புக்கு முதலமைச்சர் மாற்றிக் கொண்டார்!”

“பாட்னா நகரில் பொரிங் சாலையில், திங்கள் ஒன்றுக்கு ரூ. **1,200** வாடகை தரக்கூடிய மாளிகை ஒன்றை முதலமைச்சர் கட்டியுள்ளார்!”

“அந்த வீட்டைக் கட்டி முடிப்பதற்காக—மக்கள் சிமெண்டுக்காகத் திண்டாடிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில்—**11** வாகன் சிமெண்டை முதலமைச்சர் சொந்தத்தில் பயன்படுத்தி இருக்கின்றார்!”

“முதலமைச்சர் பணமூட்டைகளுடனும், ஆலை அரசுகளுடனும் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறார்!”

“டாட்டாக்களுக்கும், டால்மியாக்களுக்கும் பீகாரை முதலமைச்சர் விற்று விட்டார்!”

“**1956—57**—ம் ஆண்டில் சட்ட மன்றக் கூட்டம் மொத்தத்தில் **175** மணி நேரம் நடைபெற்றிருக்கிறது; ஆனால் முதலமைச்சரோ, ஐந்தே மணி நேரம்தான் சட்ட மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்!”

“அமைச்சர்கள் ஒருவர்கூட சட்ட மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத காரணத்தால், சட்ட மன்றக் கூட்டம் மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது!”

“சோட்டா நாகபுரியில் உள்ள காட்டு வளத்தை அரசாங்கம் அழித்து விட்டது!”

“ரூ. **3,000** அல்லது **4,000**—த்தில் நிறைவேற்றக் கூடிய அரசாங்கப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளி கேட்கிறது. ஆனால் இலட்சக் கணக்கான ரூபாய் செலவழியக்கூடிய பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளி கேட்பதை அரசாங்கம் தாராளமாக மறந்தே விடுகிறது!”

“கடந்த **20** ஆண்டுகளாகப் பல மாவட்டக் கழகங்களுக்குத் தேர்தலே நடைபெறவில்லை. அவ்வாறு தேர்தல் நடைபெறாத மாவட்டக் கழகங்களின் தலைவர்களாக, தனக்கு விருப்பமானவர்களையே முதலமைச்சர் நியமித்து வருகின்றார்!”

— அமெரிக்க நிபுணரால் வெகுவாகப் புகழப்பட்ட பீகாரிலேதான் இதுபோன்ற பித்தலாட்டங்கள்!

திறமையான நிர்வாக இயந்திரமென்று கூறப்படும் பீகாரிலேயே இவ்வளவு பழுதிருந்தால் இதர மாநிலங்களில் எப்படி இருக்கும்?

— இதை நினைக்கும்போது காந்தியார் இப்போது உயிரோடிருந்தால் அவர் மறுபடியும் தற்கொலை செய்துகொள்வார் என்றுதான் கூறவேண்டும்! ஃ

விருத்தாசலத்திற்கு விரைவீர்!

“விருத்தாசலம் நோக்கி விரைவீர்” என்று விடுதலைப் படையினரை நோக்கி தமிழ் முழக்கம் எழுகிறது!

பீடுநடை போட்டு, பேரெழிலும் பொலிவும் கூட்டி, வெற்றிகள் பலவற்றை அடைந்து காட்டி — மாற்றார் வியக்க வளர்ந்து வரும் தென்னாற்காடு மாவட்டத்தின் திராவிட முன்னேற்றக் கழகம் தனது மூன்றாவது மாநாட்டிற்கான அழைப்பை விடுக்கிறது!

விடுதலைப் பெரும் படையின் இலட்சியபுரிப் பயணத்தில் மற்றுமொரு படிக்கட்டு—வருகின்ற **7, 8** தேதிகளில் விருத்தாசலத்தில் அமைகிறது!

வாளை எடு! வாழ்வா; சாவா? பார்த்து விடுவோம் அதையும் எனச் சூளுரைத்து சுடர் முகம் தூக்கியிருக்கும் தாள் வணங்கா தமிழர் சேனை விருத்தாசலத்தில் கூடுகிறது!

தென்னாற்காடு மாவட்டம்—தென்னகத்து அரசியலிலே வியப்பும் விழிப்பும் கிளப்பிய நிகழ்ச்சிகள் பலவற்றை சந்தித்த மண்டலம்!

அங்குதான் அன்றொரு நாள் சேவல் கூவிற்று; செறுபகை வீழ்த்த செங்கதிரோன் எழப் போகிறான் என்று நாம் மகிழ்ந்தோம்! மாட்டுப் பெட்டியோடு மோத வந்த உழைப்பாளர் கட்சியை வரவேற்றோம்; வாழ்த்தினோம்; வெற்றிவாகை சூடவும் பாடுபட்டோம்!

ஆனால் கூவிக் கொண்டிருந்த சேவலின் குரல்வளை திடீரென்று நெறிக்கப்பட்டு விட்டது! காளை மாட்டின் கர்ண கடூர கூச்சலிடையே அந்தக் குரல் மங்கி மறைந்தது! நம்மால் பலனடைந்தோர் கொள்கையை உடைத் தெறிந்து விட்டு கோணல் வழி ஓடினார்கள்! பதவி வெறிபிடித்த பச்சைத் துரோகிகளை—நன்றி மறந்த நயவஞ்சகக் கும்பலை—நாட்டு மக்களுக்கு அன்று அறிமுகப்படுத்தி வைத்தது தென்னாற்காடு!

ஆனால், சேவல்தான் கொல்லப்பட்டது; செங்கதிரோன் எழாமலில்லை; பாரீர்—என்று உணர்த்தும் வண்ணம் நாட்டின் பழி துடைக்க நல்லோர் நால்வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்ட மன்றத்துக்கு அனுப்பி வைத்து பெரும் பேறு பெற்று விட்டது இன்று, தென்னாற்காடு!

அந்த கொள்கை முழங்கும் மறத் தமிழர் கோட்டத்திலேதான் திட்டங்களைத் தேடித் தேடி—விடுதலைப் பண் பாடிப் பாடி பணிபுரியும் போராட்டக் கழகமாம் நமதியக்கம் கூடுகிறது இப்போது!

ஆறுமுகம் பெயர் பொறித்த அழகுப் பந்தலில்—இயக்க வளர்ச்சிக்கு நாம் கொடுத்த காணிக்கைகளில் ஒன்றும், கொலை வெறி பிடித்தக் கொடியவர்களின் இரத்தப் பசிக்கு இரையான நெல்லிக்குப்பம் மாவீரன் மஜீத்தின் நினைவு சொல்லும் அரங்கிலே கூடுகிறது!

இயக்கத்தின் முதியோரில் ஒருவர்—குடந்தைப் பெரியவர்—கருமேகம் சூழ்ந்திருக்கும் அரசியல் வானிலே நீடுதுயில் நீக்கப் பாடிவரும் புது நிலவாம் நீலமேகம் மாநாட்டைத் திறந்து வைக்கிறார்!

சிங்கமெனப் பணியாற்றும் செயலரசர்—பாண்டியன் பூமியின் மகத்தான சொத்து — மதுரை தந்த மறக்குடி மைந்தராம் முத்து மாநாட்டின் தலைவர்!

சட்ட மன்றத்திலே கொட்ட மடிப்போர் தர்பாரைச் சுட்டிக் காட்டும் தீரர்—கொள்கை வீரர் கோவிந்தசாமி எம். எல். ஏ. வரவேற்புக் குழுத் தலைவராக நின்று வரவேற்கிறார்!

அயர்வு அணைத்தாலும் சட்ட மன்றத்தில் செயல் மறவாத நண்பர்கள் எம். செல்வராசு, நடராசன், ஆனந்தன் — ஆகியவர்களோடு தொண்டுள்ளம் கொண்ட தோழர்களாம் சி. முனுசாமி, ஜி. சொக்கலிங்கம், ரே. பிச்சமுத்து, பா. குப்புசாமி — ஆகியோரும் அழைக்கிறார்கள், ‘விருத்தாசலம் நோக்கி விரைவீர்!’ என்று!

புதிய திட்டம் தீட்ட — போர் விளக்கம் பெற கூடுவோம் வாரீர்—என்று நாமும் அழைக்கிறோம்! ஃ

சிங்காரத்தின்மீது எப்படியாவது பழி வந்து சேர வேண்டும்; அவனைப் போலீசார் மிரட்ட வேண்டும்; அவன் தவிக்க வேண்டும்; ஊரார் சிங்காரத்தைப் பார்க்கும் போது வெறுப்பும் அலட்சியமும் கொள்ள வேண்டும்; அதையெல்லாம் பார்த்து மகிழ்ச்சியடைய வேண்டும்—என கோட்டை கட்டிக் கொண்டிருந்த கண்ணனுக்கு சிங்காரம் பழியிலிருந்து மீண்ட செய்தி மிகுந்த வருத்தத்தை அளித்ததில ஆச்சரியமில்லை.

பொதுவாக நேரில் கண்டு குலவிக் கொள்கிறவர்களே காணாத இடத்தில் கதைகள் கட்டிப் புறம் பேசுவது சமுதாயத்தில் புரையோடி வரும் வழக்கமாக இருந்து வரும் காலத்தில் ஜென்மப் பகையாளி என்று ஆகி விட்ட கண்ணன், சிங்காரத்தைபபற்றி அவதூறுகள் பேசாமலிருப்பானா என்ன! செய்தி கேள்விப்பட்டதும் முதலில் பஞ்சாயத்தார் வீட்டுக்குத்தான் போனான். கண்ணன் வந்தாலே ஏதாவது சிங்காரத்தோடு தகராறு இருக்கும் என்று முடிவு கட்டிக் கொண்டு பேச்சை ஆரம்பிக்கப் பழக்கப்படுத்திக் கொண்ட பஞ்சாயத்தார், "வாப்பா கண்ணு! ஊர்ல ஒண்ணும் வம்பு, தும்பு இல்லியே?" என்று கேட்டார்.

"ஏனுங்க இல்லே? இருக்கிற வம்பும பெரிசாகும்போல இருக்கு—போதாதத்துக்குப் புது வம்பும் ஒண்ணு வரும்போல இருக்கு. அநேகமாக அதுவும் வந்துடடுது என்றே சொல்லலாம்!"

"என்னப்பா திடீர்க் குண்டுகளாய்த் தூக்கிப் போடுறே? கொஞ்சம் விபரமாகவே சொல்லு!"

"போலீஸ்காரவுங்களுக்கு லஞ்சம் கொடுக்கிற அளவுக்கு சிங்காரம் பெரிய மனுஷனு ஆயிட்டான்!"

"என்னது? என்னது?"

"ஆமாங்க! அந்தப் பிணத்தோட முந்தானியிலே முடிஞ்சிருந்த கடுதாசுக்கும் சிங்காரத்துக்கும் சம்பந்தமில்லேன்னு போலீசிலே தீர்மானிச்சுட்டாங்க! எப்படிங்க நியாயம் போற போக்கு?"

"சரி, விட்டுத்தள்ளு — நீ இதைப் பேசுவானேன்—அவன் சிங்காரம் ஆத்திரப்படுவானேன் — மேல மேல சண்டையை வளத்துகிட்டுப் போகாதிங்க!"

"என்னமோங்க—நான் வீண் வம்புக்குப் போகக் கூடாதுன்னுதான் இருக்கேன்—ஆனு மனசு கேக்குதா? அநியாயம் அக்ரமம் நடந்தா என்னலை தாங்க முடியிலே—இதபாருங்க—பக்தி வழிந்தோடுகிற நம்ப ஊருக்கு ஒரு பாவிப்பயல் வாத்தியாரா வந்திருக்கான்..."

"யாரு — வாத்தியாரு வந்தாச்சா? இன்னும் வந்து சேரலேனு சொன்னுங்களே..."

"அவன் வந்து ரெண்டு நாள் ஆச்சு! அவனுக்குப் பேரு அறவாழியாம் — ஒரே அதர்மம் பேசுகிறுன் — நாஸ்திகப் பயல்! அவன் வரும்போதே அபசகுனம்! ஆண்டவனுக்கே அவன் நம்ப ஊருக்கு வர்ரது பொறுக்கலை. ...யில காளையை விட்டு முட்டச் சொல்லியிருக்காரு—சரியான அடி, வந்ததும் வராததுமாய்! அப்பறம் நம்ப பூஞ்சோலை — அதான் ஊருக்கு ஒரு புண்ணியவதி யிருக்கே— அந்த அம்மா வீடலதான் ரெண்டு நாளா தங்கி உடம்புக்குப் பத்து போட்டுகிட்டு இருக்கிறுனும்..."

"நீ சொல்றது வேடிக்கையாயிருக்கே—பிள்ளைகளுககு நல்ல வழியை சொல்லிக கொடுக்க வேண்டிய வாத்தியார், நாஸ்திகம் பேசுறாரா?"

"ஆமாங்க — இப்ப வர்ர வாலிப வாத்தியார்கள் நூத்துக்குத் தொண்ணூறு பேர் அப்படிப்பட்ட ஆளுகளாய்த்தான் வர்ராங்க...பகுததறிவாம் பகுத்தறிவு...பள்ளிக்கூட மெல்லாம் பாழாகுதுங்க!"

"ம்...நம்ப வாத்தியாரு போக்கு எப்படியிருக்குன்னு கொஞ்சம் கொஞ்சமாப் பாரப்போம்..."

"இதுக்கெல்லாம் காலம் கணிக்கக் கூடாதுங்க—முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய சங்கதிங்க!"

"இப்பதானே என் காதிலே போட்டிருக்கிறே சேதியை! நான் கவனிக்க ஆரம்பிக்கிறேன்!"

கண்ணனுக்குக் கொஞ்சம் திருப்தி! சிரங்கைச் சொரிந்து விடும்போது ஏற்படுகிற இன்பத்தைப் பெற்றுன். சற்று நேரத்திற் கெல்லாம், சிரங்கின் அரிப்பு மறைந்து எரிச்சல்

கிளம்புவதுபோல அவன் உள்ளத்திலும் வெறுப்பு நெருப்பென மூண்டது. அறவாழிக்குத் தான் கொடுத்த தண்டனை போதாதென அவனுக்குப் பெரிய குறை. ஊர் முழுவதும் அறவாழியைப் பற்றிப் பிரச்சாரம் செய்து, ஊரிலுள்ள பக்தி வெறியர்களுக்கும் அவனுக்கும் பெரிய போராட்டத்தை உண்டுபண்ணி, ஆளுக்கு ஆள் அவனைத் துரத்தி அடிக்க வேண்டுமெனத் திட்டம் போட்டான். தன் ஏற்பாடுகளுக்குப் பிள்ளையார் சுழி போடுவது போலப் பஞ்சாயத்தார் பரமசிவத்திடம் முதலில் படையெடுத்தான். தான் சொல்வதை அப்படியே எல்லோரும் நம்பிவிடுவார்கள் என்றுதான் அண்டப்புளுகன் கூட எண்ணிக்கொண்டு அழுகல் சரக்குகளை அவிழ்த்துக் கொட்டுகிறுன். அந்த நம்பிக்கையில் அவனுக்கு ஒரு பெரிய திருபதி. அந்த திருப்தியிலேயே வாழ்க்கைச் சக்கரம் சுழலுகிறது அவனுக்கு. அதுபோலவே கணணனும் தான் சிங்காரத்தைப்பற்றிப் பரப்பும் கருத்துக்களை ஊரார் அப்படியே ஏற்றுக்கொள்கிறுர்கள் என எண்ணிக்கொண்டிருப்பவன் — இப்போது அறவாழியையும் எதிரி எண் இரண்டாக ஆக்கிக்கொண்டு தன் வேலையைத் துவக்கினுன். குட்டையைக் குழப்புவது பெரிய காரியமல்லவே — கேவலம்; எருமை மாடுகூடச் செய்து விட்டுப் போய்விடும் குட்டையைச் சீர்செய்து, தெளிந்த நீரை—தூய்மையான நீரைக் கட்டிக் காத்து அனைவரும் பயனடையச் செய்வதுதானே சற்று சிரமமான காரியம்—இதில் முதல் செய்கையைத் தட்டின்றிச் செய்வதில் மிகவும் கெட்டிக்காரன் கண்ணன்.

பஞ்சாயத்தார் காதில் இரண்டு பெரிய விஷயங்களைப் போட்டுவிட்டோம் — மேலும் ஆகவேண்டியதைக் கவனிப்போம் என்ற உற்சாகத்தோடு கண்ணன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்! அப்போது பஞ்சாயத்தார் மகன் சிரஞ்சீவி, "எப்போ! நம்ப ஊருக்கு வாத்தியார் வந்திருக்கார் அப்போ! அவரு உன்னைப் பார்க்க வந்திருககார் அப்போ!" என்று கத்திக்கொண்டு உள்ளே ஓடிவந்தான். மகனைப் பார்த்த பஞ்சாயத்தார், அவன் முகமெல்லாம் கரிக்கோடுகள் இருப்பதைக் கண்டு, "இது என்னடா கர்மம்—முகமெல்லாம கரி!" என்று முணுமுணுத்துக் கொண்டார்.

"அந்த வாத்தியார்தான் என் முகத்திலே கரி பூசி விட்டாரு—ரொம்ப நல்லவருப்பா!" என்று குதித்தான் சிரஞ்சீவி. வாத்தியார் வந்திருககிறுர் என்றதும் ஆவலுடன் அவரைப் பார்க்க எண்ணிய பஞ்சாயத்தாருக்கு மகன் முகத்தில் அவர்தான் கரிபூசினுர் என்றதும் ஒரு தடுமாற்றம ஏற்பட்டது.

"சரிதான் — ஆளு விஷமக்காரன்தான் போலிருககு — வரச்சொல்லு! வரச்சொல்லு!" என்று வரட்டுக் குரலில் உத்தரவிட்டார். சிரஞ்சீவி குதித்துக்கொண்டு வெளியே ஓடினுன்.

உடனே கண்ணன் "பார்த்தீங்களா? இதோ, கண்ணுக்கு நேராகவே சாட்சி — நான் சொன்னதுக்கு என்னு — அவன் செஞ்சத்துக்கு என்னு— ஊர்லே ஒரே ஒரு பெரிய மனுஷன் நீங்க,ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ மாதிரி! உங்க மகனுக்கிட்ட குறும்புத்தனம் பண்ணி கரி பூசுகிற அளவுக்கு நெஞ்சழுத்தம் இருந்தா அவன் வேற என்னதான் செய்ய மாட்டான்?" என்று தூபம் போட்டு விட்டு வெளியே கிளம்பினுன். அவனுக்கு எதிரே உள்ளே நுழைந்த அறவாழி, கண்ணனைப் பார்த்தும்பார்க்காததுபோல பஞ்சாயத்தாருக்கு வணக்கம் தெரிவித்தான். பஞ்சாயத்தார் வெகு அலட்சியமாக அறவாழியைப் பார்த்து விட்டு "யாருப்பா—நீதான் புதுசா வந்திருக்கிற வாத்தியாரோட மகனு?" என்று கேட்டார்.

அறவாழி சிரித்துக் கொண்டே, "இல்லிங்க பெரியவரே! நானேதான் ஆசிரியர் — பெயர் அறவாழி!" என்றுன்.

"ஓகோ...பள்ளிக்கூடத்திலே படிக்கிற புள்ளை மாதிரி இருக்கே — உனக்கு என்னு உலக அனுபவம் தெரியும்? நீ என்னுத்த சொல்லிக் கொடுத்து கிழிக்கப் போறே?" என்ருர், கொஞ்சம் துடுக்காகப் பஞ்சாயத்தார்.

அறவாழியின் முகத்தில் அந்த வார்த்தைகள் எந்தவித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. கல்லோ — கம்போ— தூசியோ — துப்போ விழுந்தால்தானே தொட்டியில் உள்ள

நீர் கலங்கும். ஒரு பொருளின் நிழல் விழுவதால் நீர் கலங்குவதில்லையலவா! பஞ்சாயத்தாரின் பேச்சை நீர்மேல் விழுந்த நிழலாகவே கருதினான் அறவாழி. அவமானமான முறையில் பேசுகிறார்—ஆயினும் பொறுத்துக் கொள்வோம் என்ற நினைப்புகூட வராமலே அவன் அமைதியாகஇருந்தான்.

"சின்னப் பிள்ளைங்கிறத்துக்கு சரியா, வந்ததும் வராததுமாக என் மகன் முகத்துலே கரியைப் பூசிட்டியே!" என்று மேலும் தொடர்ந்தார் பரமசிவம்.

"கரி பூசினேனா? நானா? இல்லவே இல்லையே — தம்பி முகத்திலே இருந்த கரிக்கோடுகளை அழிக்கப் பார்த்தேன்—தம்பி இணங்கவில்லை—இதோ பாருங்கள்; அழித்ததில் என் கைகூட கருப்பாகி விட்டது!" என்று கைகளை விரித்துக் காட்டினான் அறவாழி.

"கையென்னாங்க; ஆளு மனசுகூட கருப்புதான் — பகுத்தறிவுக்காரரு பாருங்க!" என்று கேலிச் சிரிப்பு சிரித்தான் கரகமாடிக் கண்ணன்.

"நீ இன்னும் போகவில்லையா?" என்றார் பரமசிவம்.

"எப்படிங்க போக மனசு வரும்? பெரிய மேதாவி வந்திருக்காரு—அவரைப் பார்த்துக்கிட்டே இருக்கலாம் போலிருக்கே!" என்று கூறிவிட்டு கண்ணன் அறவாழியை ஒருமுறை முறைத்துவிட்டு "தூ!" என சொல்லிக் கொண்டே இரண்டாம் தடவையாக வெளியே சென்றான். அவன் வெளியில் சென்ற சில விநாடிகளுக்கெல்லாம் சிரஞ்சிவி, "அப்போ! அப்போ!" என்று கூறிக்கொண்டு குதித்தோடி வந்து பஞ்சாயத்தாரைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். அவர் திணறினார். அந்த விசித்திரமான வீட்டைப் பார்க்க அறவாழிக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்னடா நடந்தது?" என்றார் தந்தை.

"அப்போ! தெருவிலே பெரிய சண்டை வரப்போறது—யானை சேனை குதிரைப் படையெல்லாம் வரப்போறது! கப்பல் சண்டை — ஏரோப்ளேன் சண்டை—பீரங்கிச் சண்டை! அப்பறம் சாவு—கொலை! அப்பறம் அமைதி—சுடுகாடு—மண்ணாங்கட்டி — அரோகரா — கோவிந்தா—கோவிந்தா!" இப்படி சிரஞ்சிவி ஆட்ட பாட்டத்தோடு கத்த ஆரம்பித்தான்.

"ஏதாவது நடக்காமல் இவன் உளறமாட்டான்" என்று கூறிக்கொண்டே பஞ்சாயத்தார் வெளியே வந்தார். வந்ததும் சிரஞ்சிவி சொன்னது உண்மையாகிவிட்டதை நேரில் கண்டார். கப்பல், பீரங்கி, விமானங்கள் இல்லாவிட்டாலும், அதைவிடக் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்து கண்ணனும், சிங்காரமும் சொற்போர் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

"அடேய் அயோக்கியப் பதரே! என்னைப் பற்றி நீ ஏண்டா தப்புப் பிரச்சாரம் செய்ய வேண்டும்?...உனக்கும் எனக்கும்தான் செத்தால் வாழ்ந்தால்கூடக் கிடையாது—உறவு அற்றுப் போச்சு! என் பேச்சு பேசாவிட்டால் தூக்கம் வராதா உனக்கு?"

"என்னடா மிரட்டுகிறாய்? நெருப்பு மாதிரி வார்த்தைகளைக் கொட்டுறியே; என்னா சங்கதி? அதெல்லாம் உன் தீச்சட்டியோட வச்சுக்க!"

"தொழிலைப் பற்றிப் பேசாதேடா முண்டமே! என் பேச்சைப் பேசுனத்துக்கு மரியாதையா பதில் சொல்லு! இல்லேன்னா மன்னிப்புக் கேட்டுக்க—நான் இப்ப உன்னை சும்மா விடமாட்டேன்!"

"மன்னிப்பு கேட்கணுமா? அது இந்த ஜென்மத்திலே இல்லை! நீ என்ன மகா மனுஷன்—உனகிட்டே நான் மன்னிப்புக் கேட்க? ஊர்லே அக்ரமம் பண்றே—பாவம்; யாரோ அனாதைப் பெண்ணு—படுபாவிப் பயல் உன்னாலே தூக்கு மாட்டிகிட்டு உசிரை விட்டிருக்கு—அதைக் கண்டிச்சுப் பேசினா உனக்குக் கோபம் பொத்துக்கிட்டு வருதோ? வரட்டும்; வரட்டும்; எனக்கொன்னும் பயமில்லை! என்ன வேணுமானாலும் செய்யி!"

கண்ணன் வரிந்து கட்டிக் கொண்டு, கை முஷ்டியை மடக்கியவாறு சண்டைக்குத் தயாராக நின்று கொண்டான். தெரு மக்கள் கூடிவிட்டார்கள்.

பஞ்சாயத்தார், "டேடேடே! நிறுத்துங்க பேச்சை!" என்று கூச்சல் போட்டார்.

"ஆமாம்;பேச்சை நிறுத்திட்டு—சண்டையை ஆரம்பிங்கோ! சண்டை நடக்கட்டும்—உலகம் அழியட்டும்!" என்று கை கொட்டியவாறு கத்தினான் சிரஞ்சிவி.

அவன் தலையில் ஓர் அறை கொடுத்துவிட்டுப் பஞ்சாயத்தார், சிங்காரத்தைப் போய்ப் பிடித்து நிறுத்தினார். சிங்காரம், பஞ்சாயத்தாருக்காகப் பணிந்து நின்ற சமயத்தில், கண்ணன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சிங்காரத்தின் நெற்றியில் பலமாக ஒரு குத்து விட்டான். அதற்குமேல் சிங்காரம் பஞ்சாயத்தாரின் பிடிக்குள் இருக்க முடியவில்லை. கையிலிருந்த கம்பைக் கீழே போட்டுவிட்டு கண்ணன்மீது பாய்ந்தான். இருவரிடையே சரமாரியாகக் குத்துக்கள் விழுந்தன. தெருவினரும் பஞ்சாயத்தாரும் குறுக்கிட்டு இருவரையும் திமிர விடாமல் அமுக்கிப் பிடித்துக் கொண்டனர். பஞ்சாயத்தார் வீட்டுக்கு நேரே நடைபெறும் ரகளையை அறவாழியும் வியப்போடு பார்த்துக் கொண்டு நின்றான்.

"நான் போலீசுக்கு லஞ்சம் கொடுத்தேன் — தப்பித்துக் கொண்டேன் என்று ஊரெல்லாம் தண்டோரா போடுகிறானே, இவனால் நிருபிக்க முடியுமா?" என்று கத்தினான், உதட்டில் வழியும் ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே சிங்காரம்!

"லஞ்சம் மாத்திரமா கொடுத்தாய்? போலீஸ், அதற்கு மாத்திரம் வளையுமா? அழகான தங்கச்சியைக்கூட......"என்று கண்ணன் சொன்னதுதான் தாமதம்; சிங்காரத்திற்கு எங்கிருந்து அந்த வேகம் வந்ததோ தெரியாது; "என்ன சொன்னாய்?" என்று ஒரே பாய்ச்சல்; புலி பாய்வதுபோல! அவ்வளவுதான்; கண்ணன் தரையிலே சாய்ந்து விட்டான். சிங்காரம் அவன் மார்பிலே உட்கார்ந்து கொண்டு மாறி மாறிக் குத்திக் கொண்டேயிருந்தான், அவன் ஆத்திரம் தணியுமட்டும்! தெருவினர்கூட சில விநாடிகள் அப்படியே அயர்ந்து போய் நின்றுவிட்டனர்.

கண்ணன், சிங்காரத்தின் தங்கையை பேச்சின் நடுவே மிகவும் கேவலமான வகையில் இழுத்துப் பேசியது யாருக்கும் பொறுக்கவில்லை. அதனால் சிங்காரத்திற்கு சிறிது நேரம் அவன் கோபத்தைத் தணித்துக்கொள்ள சந்தர்ப்பம் அளித்து ஒதுங்கிக் கொண்டனர்.

கண்ணன், "அய்யோ அய்யோ" என்று அலறினான்.

அப்போது, "ஓ" என்று கதறிக்கொண்டு அங்கே கற்பூரம் பிரவேசித்தாள். அண்ணனின் கையைப் பிடித்துக்கொண்டு 'நிறுத்து! நிறுத்து!" என்று கூச்சலிட்டாள்.

"தங்கச்சி! நீ குறுக்கிடாதே-போ!" என்று சீறிய சிங்காரம்—திடுமென ஏதோ உணர்ச்சி வசப்பட்டு "அய்யோ கற்பூரம்! உன்னைப்பற்றி...உன்னைப்பற்றி..." என்று சொல்ல வாயெடுத்து, சொல்ல முடியாமல் விம்மி அழுது மீண்டும் கண்ணன் முகத்தில் குத்துக்களைப் பொழியத் தொடங்கினான்.

"விடு அவரை! ஒன்றும் செய்யாதே! விடு ! விடு!" என்று கத்தினாள் கற்பூரம். சிங்காரம் கேட்கவில்லை. கற்பூரம் அண்ணனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, கண்ணன்மீது அடிகள் விழாதபடி தடுத்தாள்.

சிங்காரம், கற்பூரத்தை இழுத்துத் தள்ளி, "கற்பூரம்! போ வீட்டுக்கு!" என்று உத்திரவிட்டான், கடுமையாக!

"முடியாது! நீ அவரை அடிக்கக் கூடாது!"

"அடிப்பதா? அவனைக் கொல்லுவேன்!"

"சொன்னால் கேள் அண்ணேன் — அவரை ஒன்றும் செய்யாதே — அவ்வளவுதான் சொல்வேன்!"

"அவனுக்கு நீ வக்காலத்து வாங்குகிறாயா?......போ, மரியாதையாக வீட்டுக்கு!"

"அப்படின்னா என்னையும் இங்கேயே கொல்லு!"

கற்பூரம் — நீ என்ன சொல்றே?"

"எதுக்காக மறைக்கணும்—நான் அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்—நான் அவருக்கு மனைவி......எனக்குக் கணவனைவிட அண்ணன் பெரிசு இல்லே!"

"கற்பூரம் ஆத்திரமாகப் பேசி அழுதாள். சிங்காரத்தின் எல்லா நாடிகளும் ஒடுங்கிவிட்டன. பிரேதம் போலாகிவிட்டான். முகம் வெளுத்துவிட்டது. "ஆ!" என்ற ஒரே சப்தம்—அப்படியே சிலைபோல நின்றுவிட்டான். கண்ணன் எழுந்தான். சிங்காரத்தைப் பலங்கொண்ட மட்டும் தாக்கினான். சிங்காரம் எதிர்த்து ஒரு அடிகூடத் திருப்பித் தரவில்லை. எல்லா அடிகளையும் மௌனமாக வாங்கிக் கொண்டான்.

கற்பூரம் குறுக்கே வந்து. "அண்ணா! அண்ணா!!" என்று கத்தினாள். அவளையும் இழுத்துத் தள்ளிவிட்டுக் கண்ணன் சிங்காரத்தை மேலும் தாக்கினான். சிங்காரம் அசையாமலே நின்றான்.

(தொடரும்)

மலிவுப் பதிப்புகள் விற்பனையாகின்றன!

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய

மனோன்மணீயம்

[மூலமும், பேராசிரியர் பி. ஸ்ரீ. அவர்களின் ஆராய்ச்சி மிக்க விமர்சனக் கட்டுரைகளும், தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத அய்யருக்கு ஆசிரியர் எழுதிய கடிதமும் உரைக் குறிப்புகளும் கொண்டது.]

சுமார் 450 பக்கங்கள். விலை ரூ. 2

கலித்தொகை [மூலமும் விளக்கமும்]

விளக்கம்: சக்திதாசன் சுப்பிரமணியன்

விலை. ரூ. 2

குறுந்தொகைக் காட்சிகள்

[மூலமும் விளக்கமும்]

பண்டைத் தமிழர் காதல் இலக்கியம்

விளக்கம்: சக்திதாசன் சுப்பிரமணியம்

விலை ரூ. 2

அடுத்து வரும் வெளியீடு:

வைத்திய அறிஞர் ஹரி அவர்கள் 'ஆனந்த விகடனி'ல் எழுதிய

வீட்டு வைத்தியம்

விலை ரூ. 2

சென்னை நகர விற்பனை உரிமை:

நேரு நியூஸ் மார்ட், மயிலாப்பூர்.

தமிழகம், 59, பிராட்வே, சென்னை-1.

வருந்துகிறோம்

சென்ற 1—6—58 அன்று. தோழர் சி. பி. சிற்றரசு அவர்களின் தமக்கையாரின் கணவரும், தாய்மாமனுமான திரு வி. ஆர். ராசகோபால் அவர்கள் சில நாட்கள் நோய்வாய்ப்பட்டு, வேலூர் மருத்துவ மனையில் இயற்கை எய்தினார்-என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



அவசர அவசரமாக சரசா பஸ்ஸிலே ஏறினள். நெஞ்சம் கவர்ந்த அஞ்சுகத்தை விட்டுப் பிரியும் காளை நெஞ்சினன் விடும் பெருமூச்சுபோல, பஸ்ஸும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு ஆயிரம் விளக்கு நிலையத்திலிருந்து புறப்பட்டது! சென்னை பஸ்களில் எப்பொழுதுமே ஜன நெரிசல்...அதுவும் காலை நேரத்தில் சொல்லத் தேவை இல்லை; ஒரே கூட்டம்! சரசா எப்படியோ தொத்திக்கொண்டாள். ஆண் குலத்துடன் எல்லா வகையிலும் போட்டியிட்டு, சம உரிமைக்காக 'சமர்' புரியும் சரச வல்லிகளுக்கு அப்படி ஏன் இடம் கொடுக்க வேண்டும் என்ற தத்துவம் வளர்ந்து கொண்டிருக்கிற இக்காலத்தில், அந்த சமுதாயத்தில் ஒரு அங்கமாகக் காட்சியளிக்கும் சரசாவிற்கு யாரும் இடம் கொடுக்க முன் வராததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!

"ஒரு பெண் நின்று கொண்டு கஷ்டப்படுகிருளே; உட்கார இடம் கொடுப்போம் என்ற நாகரீகமே தெரியவில்லையே இவர்களுக்கு!"—சரசாவின் வாய் முணுமுணுத்தது. அது அவள் அருகில் அமர்ந்திருந்த வாலிபனின் காதில் விழுந்திருக்க வேண்டும்; இல்லையென்ருல் அவன் ஏன் அவளைப் பார்த்து ஒரு புன்னகையை சிந்தப் போகிருன்! அந்தப் புன்னகைக்குச் சொந்தக்காரன் ஒருநாள் தன் வாழ்வில் துன்பப் புயலை எழுப்பப் போகிருன் என்று அன்று அவளுக்குத் தெரியாது!

பஸ் 'ரவுண் டாணு'வைச் சுற்றியது. அலைகடலில் அசையும் படகைப்போல, பஸ்ஸும் அசைந்தது. அந்த அசைவில் அவள் தடுமாறி அந்த வாலிபனின்மீது மோதிக் கொண்டாள். அந்த மோதல் தனது வாழ்க்கைப் படகை மோதி சுக்கு நூருக்குவதின் ஆரம்பம் என்று அவளுக்குத் தெரியாது! கையிலே இருந்த ஏடுகள் 'சடசட' வென்று விழுந்தன, முல்லைக் கொடியிலே இருந்து விழும் மலர்களைப்போல! அவளால் குனிந்து அவைகளைச் சேகரிக்க இயலவில்லை. அந்த வாலிபன் கடற்கரை மணற் பரப்பில், கிளிஞ்சல்களைப் பொறுக்கும் குழந்தையைப்போல புத்தகங்களை சேகரித்து அவளிடம் தந்தான். அவள் "நன்றி" என்று கூறுவாள்; "தேவை இல்லை" எனக் கூறலாம் என்று எண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனல் பாவம், அந்தப் பாவை ஒரு வார்த்தையையும் உமிழவில்லை. ஏனெனில், உட்கார இடம் கொடுக்கவில்லையே என்ற கோபத்தால்தான் இந்த உதவிக்கு அவள் நன்றி கூறவில்லை. ஒன்றை எதிர்பார்த்து, அது கிடைக்கும் என்று எண்ணி இறுமாந்து கொண்டிருக்கும் நேரத்தில், அது கிடைக்காமலபோய்விட்டால், அது நெஞ்சத்திலே எரிச்சலை உண்டாக்கும். அந்த நிலை தான் பெற்ருன் அந்த வனப்பு மிக்க வாலிபனும்! அந்த எரிச்சல் எரிதணலாக தன் வாழ்க்கையில் தொடர்ந்து சுட்டெரிக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆனல், திடீரென்று ஒரு நிகழ்ச்சி நடந்து, வாழ்க்கையின் திசையையே மாற்றுவதுதானே காலத்தின் கோலம்! அவன் நெஞ்சம் அவமானத்தால் எரிந்தபோதலும் ஏந்திழையாளைப் பார்க்காமல் இருக்கும்படி தனது கண்களுக்குக் கட்டளை இட முடியவில்லை அவனல். காரிகைகளைக் கண்டவுடன்தான் ஆண்களின் கண்கள் கடையாணி இல்லாத சக்கரங்களாகி விடுகின்றனவே!

ஒரு வழியாக பஸ் மாநிலக் கல்லூரி அருகில் நின்றது. சரசா கீழே இறங்கினள். அந்த வாலிபனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

அதைக் காணக் காண அவளுக்குக் கோபமாக வந்தது. "புடவை கட்டியவர்களைக் கண்டாலே அவர்களை வட்டமிடுவதே வாலிபப் பட்டாளத்தின் வாடிக்கை! அதுவும் மூக்கும், முழியுமாக இருந்தால் பின்தொடரவே ஆரம்பித்து விடுகிருர்கள்!" என்று உரக்கவே கூறினள் சரசா 'களுக்'கென்று சிரித்தான் அவன். அந்தச் சிரிப்பு அவளை சித்திரவதை செய்தது. அவனல், அவள் வாழ்வே சித்திரவதை அடையப்போவதை எப்படி அறிவாள்?

கோடை விடுமுறைக்குப் பின், அன்றுதான் கல்லூரி திறந்தது. ஆகவே இடம் தேடி அலையும் புதிய மாணவர்களும், பழைய மாணவர்களும், எறும்பு சாரையைப்போல கல்லூரியினுள் நுழைந்து கொண்டிருந்தனர். சரசாவும் நுழைந்தாள்; அவனும் தான்! சரசாவிற்கு சந்தேகம் பிறந்தது. அவனும், அக்கல்லூரியின் மாணவனே என்று!

கல்லூரி மணியோசை எழுந்தது—வகுப்பு ஆரம்பமாவதின் அறிகுறி அது! சரசா வகுப்பில் நுழைந்தாள்! அவனும் அவள் பின்னலே வந்து கொண்டிருந்தான். அவனும் தன்னைப்போலவே ஹானாஸ் படிக்கும் மாணவன் போலும் என எண்ணிக் கொண்டாள் அக் கண்ணழகி ஆனல் அவன் மாணவர்களோடு உடகாரவிலலை. ஆசிரியர் அமரும் ஆசனத்திலே போய் அமர்ந்தான். அப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது, தன்னைப் பின் தொடர்ந்து வந்த வாலிபன் பொருளாதாரப் பேராசிரியர் என்று. ஆச்சரியத்தால் அவள் அழகிய கணகள் அகல விரிந்தன. வாத்தியாரிடத்தில் துடுக்குத்தனமாக வம்பு செய்து விட்டோமே என்று அவள் நெஞ்சம் குறுகுறுத்தது. மெள்ள ஏறிட்டுப் பார்த்தாள். அவரும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். அவரது இதழோரம் ஒரு குறுநகை நெளிந்து ஓடியது.

இப்படித்தான் சரசா, மாதவன் சந்திப்பு ஆரம்பமாயிற்று. முதலில் சாதாரணமாகத் தோன்றுகின்ற சந்திப்பு சில சமயங்களில் மிக முக்கியத்துவம் பெற்று விடுகிறது—காதலின் களமாகக் கூட மாறுவதுண்டு. அதைப் போலத்தான் ஆயிற்று அவர்களின் கதையும்!

மாதவன் மாம்பலத்து வாசி! ஆயிரம விளக்கின் அப்சரஸ் சரசா! ஆகவே அவர்கள் இருவரும் சேர்ந்து பயணம் செய்யவும்' அடிக்கடி சந்திக்கவும், பேசவும்' பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. ஆசிரியர், மாணவி என்ற நிலை மாறி, நண்பர்கள் என்ற நிலை பிறந்தது, சில நாட்களில்!

காதல் என்ற புத்தகத்தின் முன்னுரைதானே நட்பு! அந்த நட்பு வளர வளர மாதவன் உள்ளத்தில் காதல் பிறந்தது. அது ஏன் பிறக்கிறது; எப்படிப் பிறக்கிறது என்ற கேள்விகளுக்கு இதுவரை யாருமே விடை காண முடியவில்லையே! 'பருவக் கோளாறு' என்பார்கள் பழமை பித்துக் கொண்டோர். 'காவியமும் கவிதையும் படித்ததால் ஏற்படும் விசித்திர நோய்' என்பார்கள் தத்துவார்த்த வாதிகள். வாலிப உள்ளங்களில் பருவ காலத்தில் விளையும் பயிர் தான் காதல்! செடி முதிர்ந்ததும் காய்களைத் தருகிறது. அரும்பு முதிர்ந்ததும் மலர்ந்து மணம் வீசுகிறது. அதைப்போலத்தான் வாலிப உள்ளம் மலர்ந்ததும், அல்லது முதிர்ந்ததும் காதல் கொள்ளுகிறது! அது இயற்கையின் நியதி! அந்த வகையில் மாதவன் உள்ளத்தில் காதல் அரும்பியது.

சரசாவின் உள்ளத்தை அவனல் அறிந்து கொள்ள முடியவில்லை. அவள் அவனைப்பற்றி எப்படி நினைத்துக் கொண்டிருக்கிருள் என்பதையும் அவனல் புரிந்து கொள்ள இயலவில்லை. குழைந்து குழைந்து பேசினள்; சிரித்து சிரித்து சித்திரவதை செய்தாள். அதனல் அவள் அவனை காதலிக்கிருள் என்று எப்படி தீர்மானிக்க முடியும்? ஆகவே அவளது எண்ணத்தை அறிந்து கொள்ளத் துடித்தான் மாதவன்.

மாதவன் கவி காளமேகம் அல்லவே, மேக மண்டலத்தைத் தூது அனுப்ப! சங்க காலத் தலைவர்கள் 'அவளது மனம் அறிந்து வா தோழா' என்று தூது அனுப்புவார்களே அந்த நிலையும் அல்ல அவனுக்கு. ஆகவே அவனுக்கிருந்த ஒரேவழி கடிதம் எழுதுவது தான். அது மாத்திரமல்ல; நேரில் பேசவெட்கப்படுகின்றவைகளைக் கூட கடிதத்தில் எழுதலாமல்லவா? ஆகவே அவன் இதயத்தின் ஆசைகளைச் சொல்லாரமாக்கி அனுப்பத் தீர்மானித்தான். பேராசிரியர்தான்; காவியம் பல கற்றவன்தான்; ஆனல் ஒரு காதல் கடிதம் எழுத மிகச் சிரமப்பட்டான்!

முல்லை சக்தி

"என் இதய சிம்மாசனத்தில் கொலுவீற்றிருக்கும் எழிலரசிக்கு,

அகராதியைப் புரட்டிப் புரட்டி வார்த்தைகளைத் தேடித் தேடி, உன் அழகை வர்ணிக்க விரும்பவில்லை நான்! நீ அழகி; பேரழகி; என் உள்ளம் கவர்ந்த கட்டழகி! என்று உன் முக மண்டலத்தைக் கண்டேனே—அன்றே, அந்தக் கணமே நீ என் மனமாளிகையில் நிரந்தரமாகக் குடியேறி விட்டாய். புத்தகத்தோடும், படுக்கையோடும் நிரந்தர ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த நான், ஊணின்றி. உறக்கமின்றி வாடுகிறேன் உன் நினைவால்! நான் உன்னை விரும்புகிறேன்; நேசிக்கிறேன்; காதலிக்கிறேன்; மனமாளிகையில் வாடகையின்றி குடியேறிய உன்னை என் மண் மாளிகைக்குத் தாலிக் கயிற்ருல் பிணைத்தழைத்துச் செல்ல விரும்புகிறேன். துன்பம் சூழ்ந்த என் வாழ்வில் இன்பம் சேர்க்கும் யாழ் நீ; கசப்பான என் வாழ்வின் சுவையே நீதான்; நீ இல்லையேல், எனக்கு அமைதி இல்லை; ஏன் வாழ்வே இல்லை. சாவூருக்கு என்னைத் துரத்தி விடாதே!

உன் அன்பைப்
பெறத் துடிக்கும்,
மாதவன்"

கடிதத்தை — அவன் இதயத் துடிப்புகளை — தபாலில் சேர்த்து விட்டான். நாட்கள் மடிந்து கொண்டிருந்தன. ஆனல் அவன் உள்ளம் கவர்ந்தவளிடமிருந்து பதிலே இல்லை; அது மாத்திரமல்ல; வழக்கமாக நடைபெறும் சந்திப்பிற்கும் முற்றுப் புள்ளியைப் போட்டு விட்டாள் அப்பட்டு மேனியாள்!

அவன் தளரவில்லை; மீண்டும் எழுதினன்; எழுதிக் கொண்டேயிருந்தான். முடிவில் ஒருநாள், அவளிடமிருந்தே பதிலும் வந்தது.

"பேரன்பு கொண்டவரே! காதல்—கவிஞர்களின் கற்பனை சொல் என்று எண்ணியிருந்த எனக்கு 'இளம் உள்ளங்களின் ஜீவனே காதல்தான்' என்ற உண்மையை உணர்த்தி விட்டது உங்களது கடிதங்கள். காற்றில் ஊசலாடும் சருகாகி விட்டது என் உள்ளம். ஆனல் பெண்களின் பளிங்கு போன்ற மனதில் காதல் என்ற சொல்லை உளி கொண்டு செதுக்கி, பின் அதை அலங்கோலப்படுத்திவிடுவார்களாமே ஆண்கள்—நீங்கள் அப்படி அல்லவே?

அன்பு மறவா,
சரசா"

மாதவன் இதயம் மகிழ்ச்சியால் விம்மியது; 'வெற்றி! வெற்றி!' என்று அவன் உள்ளம் உரக்கக் கூவியது! இனி வளர்த்துவானேன்? அவர்களின் அன்பு வளர்ந்தது, வளர்பிறை போல. மாலை நேரங்களில், மரீனு கடற்கரையின் மணற் பரப்பில் ஒரு மூலையில் அமர்ந்து மணிக் கணக்காய் பேசுவார்கள். வாழ்ந்தால் இருவரும் சேர்ந்தே வாழ்வது; மணமேடை ஏறுவதற்குத் தடை பல வந்தாலும் எதிர்த்துப் போராடுவது என்ற உறுதி பூண்டார்கள்.

ஒருநாள் மாலை...வழக்கம்போல் மரீனு கடற்கரையில் குறிப்பிட்ட இடத்தில் மாதவனுக்காகக் காத்திருந்தாள் சரசா. மாலை தேய்ந்து கொண்டே இருந்தது. ஆனல் மாதவன் வரவில்லை. அவள் உள்ளம் வேதனையால் வாடியது. தன் சிந்தையைக் கவர்ந்த கண்ணுளன் வராததற்குக் காரணம் என்னவோ? கசந்து விட்டேனே? காதல் கதைகளில் வருவதைப் போல, மறதிக்கு அடிமையாகி விட்டாரோ? வேலைகளின் தொல்லையோ? ஒருவேளை உடல் நலம் சரியில்லையோ? இப்படி ஓடியது அவள் சிந்தனை. மாதவன் இல்

லத்தை நோக்கி விரைந்தாள். வீட்டை அடைந்ததும், கதவைத் தட்ட கரங்களை எடுத்தாள். அதற்குள் அவள் கேட்ட பேச்சுக் குரல், கரங்களைச் செயலற்றதாக்கிவிட்டது. தன் வீட்டில் தன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று கூறியிருந்தான். ஆனல் அவளது செவிகளில் ஒரு பெண்ணின் குரல் வந்து விழுந்தது!

"எங்கே கிளம்புறீங்க? இப்போதெல்லாம் மாலை நேரங்களில் வீட்டில் தங்குவதே இல்லை. என்ன வேலை அப்படி? இன்ருவது வீட்டில் இருங்கள்!" என்று ஒலித்தது அப் பெண்ணின் குரல்.

"ஆமாம் அப்பா! இன்னைக்கு இங்கே இருப்பா" என்று ஒரு குழந்தை மழலை பேசியது.

சரசாவிற்கு ஏதும் புரியவில்லை. மெள்ள சன்னலில் எட்டிப் பார்த்தாள், அங்கே?...மாதவன் மடியில் ஒரு குழந்தை; அருகிலே ஒரு தையல்! சரசாவிற்குப் புரிந்து விட்டது; எல்லாமே புரிந்து விட்டது! அப்பெண் மாதவனின் மனைவி—குழந்தை அவர்களுடையது! அவள் இதயத்தில் ஆயிரம் ஆயிரம் செந்தேள்கள் ஒரே சமயத்தில் கொட்டின! மண்டையில் சம்மட்டியால் அடிப்பது போன்ற ஒரு உணர்ச்சி! கண்கள் காட்டாறுகளாயின. திரும்பினுள்; வீட்டிற்கு எப்படித்தான் வந்து சேர்ந்தாளோ!

"துரோகம்; பச்சைத் துரோகம்!" என்று அவள் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. இதயமோ ஓயாமல் அழுதது. அமைதியாக சென்று கொண்டிருந்த வாழ்வில் புயலை எழுப்பி விட்டானே, பாவி! அவனது நடவடிக்கை அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது; உண்மையை அறிந்து கொள்ளத் துடித்தாள்!

மறுநாள்......வழக்கமான இடத்தில் அமர்ந்திருந்தாள் சரசா. மிகவும் சிரமப்பட்டு தனது ஆத்திரத்தையும் கவலையையும் மறைத்தாள். மாதவன் புன்னகையை தவழ விட்டுக் கொண்டே வந்தான். சரசா பேசவில்லை.

"நேற்று வரவில்லை என்றுதானே கோபம் சரசா? திடீரென்று ஒரு வேலை வந்துவிட்டது. ஆகவேதான்..."

"நான் யார், நீங்கள் வரவில்லையே என்று கேட்பதற்கு? எனக்கு என்ன உரிமையிருக்கிறது?"

"என்ன சரசா, அப்படிக் கேட்கிருய்? உலகத்தில் யாருக்கும் அளிக்காத உரிமைகளை யெல்லாம் நான் உனக்கு அளித்திருக்கிறேன்!"

"ஏன், உங்கள் மனைவிக்கு?..."

"உம்......மனைவி!.........மாதவன் திகைத்தான்; திக்குமுக்காடினன்.

"ஏன்; உங்கள் முகமூடி கிழிந்து விட்டதே—குட்டு வெளிப்பட்டு விட்டதே என்று திகைக்கிறீர்களா? ஐயா பேராசிரியரே! போதும் உங்கள் நாடகம்! உங்கள் சயன அறையை அலங்கரிக்க என்னைத் தேர்ந்தெடுத்தீர்களா? என்மேல் கொண்ட காமத்திற்குக் காதல் என்ற புனிதமான பெயரை ஏன் சூட்டினீர்கள்? நல்லகாலம்; நான் தப்பித்தேன்!"

"சரசா, நான் சொல்வதைக் கேள்!"

"நீங்கள் சொல்லியதைக் கேட்டுத்தான் செல்லரித்து விட்டது என் வாழ்வு! இனி உங்களுக்கும் எனக்கும் எந்த விதமான உறவும் இல்லை! போங்கள்; போய் விடுங்கள்! அவளால் பேசமுடியவில்லை; வேகமாக எழுந்து சென்ருள்.

மறுநாள் மாலை...சரசா அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். வாழ்வில் எழுந்த புயலை எண்ணி பெருமூச்சு விட்டாள்.

அப்போது மாதவன் உள்ளே நுழைந்தான்; சுட்டெரிப்பதைப் போல அவனைப் பார்த்தாள்.

"எங்கே வந்தீர்கள்? என்ன வேலை இங்கே?"

"நான் சொல்லும் விளக்கத்தைக் கேள்!"

"கைப் புண்ணுக்கு கண்ணாடி தேவை இல்லை!"

"ஆனல் புண்ணிற்கான காரணத்தையாவது அறிந்துகொள்ள வேண்டாமா?"

"தேவை இல்லை எனக்கு...நான் கேட்பதற்கு பதில் சொல்லுங்கள், முதலில்! உங்களுக்குத் திருமணமாகி வீட்டின் திருவிளக்கு ஒளி, வீசிக்கொண்டிருக்கும்போது என்னை ஏன் காதலிப்பதாக நடித்தீர்கள்?

"சரசா! என்னைச் சொல்லால் கொல்லாதே! உன்னைக் காதலித்தேன்...இன்றும் காதலிக்கின்றேன்...இனியும் காதலித்துக் கொண்டேதான் இருப்பேன்! எனது காதல் தூய்மையானது; காமவெறி பிடித்தலையும் கயவனல்ல நான்!"

"ஓகோ, இரண்டாவது திருமணம் செய்துகொள்ள விருப்பமோ? உடைகளை மாற்றிக் கொள்வதைப் போல மனதையும் மாற்றிக் கொள்ளுபவர்கள்தானே ஆண்கள்!"

"என் மனைவிக்கு எலும்புருக்கி நோய்! சாவூரை நோக்கி மிக வேகமாகப் போய்க் கொண்டிருக்கிருள். இரண்டொரு மாதங்கள் தான்...பின் மீளாத நித்திரை... அதற்குப் பின் உன்னை மணந்து கொள்ளலாமென்று......"

"ஐயோ! இதயமே இல்லையா உங்களுக்கு? தாலி கட்டிய மனைவி மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கிருள். நீங்களோ மணமகள் தேடுகிறீர்கள்! இரும்பு இதயம் கொண்டவரே! உம்மைத் துரும்பென மதிக்கிறேன், நான்! கரும்பென வாழ்ந்த மனைவி மரணப் படுக்கையில்......அரும்பென ஒரு மழலைச் செல்வம்...அதற்குள் மணமகள் வேட்டைக்குப் புறப்பட்டுவிட்டீர்! ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்......நீங்கள் மரணப் படுக்கையில்; உங்கள் மனைவி மறுமணம் புரிந்துகொள்ள மணமகனைத் தேடினல் உங்கள் மனம் எப்படியிருக்கும்? உங்கள் மனைவியைப் பிடித்திருக்கும் எலும்புருக்கி நோயை முயன்ருல் டாக்டர்கள் குணப்படுத்திவிடுவார்கள். மதனபல்லியும், பெருந்துறையும் அவர்களுக்கு பேருதவி புரியும். ஆனல் உங்களைப் போன்ற சமுதாயத்தின் எலும்புருக்கிகளை எத்தனை எத்தனை டாக்டர்கள் வந்தாலும் குணப்படுத்த முடியாது!"

"போதும் சரசா, போதும்!"—அவனல் பேசமுடியவில்லை. இருமினன்; ஓயாமல் இருமினன்; மூச்சு திணறு மட்டும் இருமினன். விழிகள் பிதுங்கின. சரசா அவன் நெஞ்சத்தைத் தனது மென் கரத்தால் தடவிக்கொடுத்தாள். குளிர்ந்த நீர் கொண்டு வந்து குடிக்கச் செய்தாள். குளிர்ந்த நீரைவிட குளிர்மொழிப் பாவையின் உபசரிப்பு அவனுக்கு இதமாக இருந்தது.

அப்போது உள்ளே நுழைந்தார் சரசாவின் தந்தை, "யார் இப்போது இருமியது?" என்று கேட்டுக்கொண்டே. மாதவனை கண்டதும், "ஓ, நீங்களா இருமியது? உங்கள் மனைவியை என் வைத்தியசாலைக்கு அழைத்து வந்தீர்களே; அன்றே நினைத்தேன் உங்களுக்கும் எலும்புருக்கி நோய் என்று! அது இன்று ஊர்ஜிதமாகிவிட்டது" என்ருர்—டாக்டர் பாணியில் பேசிக்கொண்டே போனுர் அவர்.

அதைக் கேட்கக் கேட்க மாதவனின் முகம் வெளுத்தது. உடல் நடுங்கியது. மயக்கம் போட்டு கீழே சாய்ந்தான். சரசா செய்வது இன்னதென்றறியாமல் திகைத்தாள்! ஃ

பணம் பாழாகும் படலம்!

பொதுப்பணம்: அரசாங்கத்தின் கஜானுவுக்குள் புகுந்து விட்ட பின், ஒரு ரூபாயாக இருந்தாலும், பொறுப்போடு பாதுகாக்க வேண்டிய தனித் தன்மையை —உயரிடத்தைப் பெற்றுவிடுகிறது!

அரசாங்க சிப்பந்தி: அமைச்சராக இருந்தாலும், கோல் பிடித்து வாசல் காக்கும் நாலாந்தரப் பணியாளராக இருந்தாலும், ஒவ்வொரு சல்லிக்காசையும் கண்ணின் கருமணிபோல் காத்து —பக்குவமறிந்து—தேவையுணர்ந்து செலவிட வேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள்!

அயர்வை அச்சத்தால் போக்கி, இரத்தத்தை வியர்வைக் குளமாக்கி, வாடுகின்ற பாட்டாளி, உழைப்பிலே தேடுகின்ற அந்த ஊதியம், 'வரி' என்ற உருவமெடுத்து ஆட்சி பீடத்தின் சொத்தாகும்போது, அதற்கும் அதன் காவலர்களுக்கும் மேற்கண்ட இலக்கணம்தான் பொருந்தும்!

இது நல்லவர்கள் ஆட்சியில்!

ஆளத் தெரியாதவர்கள் அரங்கமேறிவிட்ட நமது நாட்டிலோ...?

சுழல் விளக்கின் சுழற்சியிலே பட்டு மறைகின்றன பல்லாயிரம் பயங்கரங்கள்!

மக்களின் வரிப்பணம் ஓட்டாஞ்சல்லிகளாக மாறிவிடுகின்றன!

ஊழல் என்ற பெருங் கடலிலே கரைத்து விடப்பட்ட பெருங்காயமாக-புரியாத 'மாய'மாக மறைந்துவிடுகின்றன!

பன்றியின்முன் வீசி எறியப்பட்ட முத்துக்கள்போல் பாழடைந்து, பெருமை குலைந்து, பண்பு கெட்டோரின் துரைத்தனத்தை பறைசாற்றுகின்றன!

ஊழல்!

ஊதாரித்தனம்!

உருப்படாத காரியத்துக்கு உழைப்பு பாழ்! உழைப்பின் பிறப்பான ஊதியமும் பாழ்!!

டெல்லி மூலவர்களின் நிர்வாக இலட்சணம் பற்றிய இந்தச் சோகத் தொடர் கதையை நாட்டு மக்களின் முன்னல் ஏடுகளின் வாயிலாக எடுத்துவைக்கும் பொதுக் கணக்குத் தணிக்கைக் குழுதான் இப்போது நெஞ்சம் குலுக்கும் உண்மை ஒன்றை எடுத்துக்காட்டியிருக்கிறது!

பலகோடி ரூபாய் கொட்டிக் குவித்து கட்டி முடிக்கப்படுகின்றன, அநேக அணைக்கட்டுத் திட்டங்கள், வடக்கே!

அதிலே முக்கியமானதுதான், தாமோதர் அணைக்கட்டுத் திட்டம்!

வேலை முன்னேற்றத்தில்—திட்டப் பலனில் முக்கியமானது அல்ல!

ஊழலில்–ஊதாரித்தனத்தில்

சிரிப்பதா—அல்லது இந்த ஆட்சியாளரின் சீரழிவுச் செலவுகள் கண்டு அழுவதா என்றே புரியவில்லை! 92,089 ரூபாய் செலவில் தாமோதர் நதித் திட்டத்தில் சேராத ஒரு 'குட்டித் திட்ட'த்தை ஏற்பாடு செய்தார்கள். அதாவது, உல்லாசப் பிரயாணத்திற்கான 27 மின்சாரப் படகுகளை வாங்கினுர்கள்.

படகுகள் வாங்கி அதற்கு மேலே கட்டிடம் கட்டுவது வரையின் ரூ. 73,105 செலவாயிற்ரும்! சம்பந்தப்பட்ட சிப்பந்திகளுக்கான செலவு 1956–57-க்குள் இடைப்பட்ட ஒரு ஆண்டில் ரூபாய் 18,984 ஆயிற்ரும்!

கிட்டத்தட்ட ஒருகோடி ரூபாயை ஏப்பமிட்டு விட்ட அந்த 27 படகுகள், 1955 முதல் 57 வரை இரண்டு ஆண்டுகளிலும் சம்பாதித்துக் கொடுத்த 'பெரும் தொகை' எவ்வளவு தெரியுமா?

89 ரூபாய்கள்!

பொருளதிபர்களும், வியாபாரப் புலிகளும் ஆயிரத்தை 'ஒன்ருக்கி'ப் பேசிக்கொள்வார்களே அந்த வியாபார மொழியிலல்ல!

வெறும் எண்பத்து ஒன்பதே ரூபாய்கள்தான்!

மூலதனம் ரூ. 92,089.
வருமானம் ரூ. 89.

இந்த அக்கிரமத்திற்கு—இதைப் போல ஆயிரமாயிரம் அநியாயங்களுக்குக் காரணமானவர்கள்தான் 'சாதனைகளின் பட்டியலைப் பாரீர்!' என்று வெட்கமின்றி மக்களின் கண்களுக்குத் திரைபோட முயல்கிருர்கள்!

புள்ளி விபரங்கள் காட்டுகின்ற இந்தக்கொடுமைகளுக்கு பதில் என்ன?

—இப்படித் தட்டிக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள் மக்கள்! 'பஞ்சிலத்தோர்' புதுநாடு அமைக்கின்ற லட்சணத்தை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கிவிட்டான், உடல் வருந்த காலணு, அரையணுக்களைச் சேர்த்துக்கொடுக்கின்ற பாமரன்!

விளைவு...? பொருத்திருந்து பார்க்கத்தான் போகிருேம், அந்த வீழ்ச்சிப் படலத்தை!

★ மத்திய செயற்குழு முடிவுகள் ★

[திராவிட முன்னேற்றக் கழக மத்திய செயற்குழுக் கூட்டம் 6—6—58 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அவினியூ சாலையிலுள்ள அண்ணா அவர்களது இல்லத்தில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் கூடி பல முக்கியமான முடிவுகளை மேற்கொண்டது. அவைகளின் விபரம் கீழே தரப்பட்டிருக்கிறது.]

1. அனுதாபம்

திராவிட நாட்டின் விடுதலைக்காக அயராது பணியாற்றியவரும், திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராயிருந்து சீரிய பணியாற்றி வந்தவரும், 'சண்டே அப்சர்வர்' ஆசிரியருமான தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவுக்கு இச் செயற்குழு மிகவும் வருந்துவதுடன் அவரது குடும்பத்தாருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. தலைமைக் கழக நிர்வாகம்

தலைமைக் கழகத்தின் அன்றாடப் பணியினை அவ்வப்போது நிறைவேற்ற தலைமைக் கழகப் பொறுப்பாளர் ஒருவரைப் பொதுச் செயலாளர் அவர்கள் நியமனம் செய்யுமாறு இச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

3. நம்நாடு நிர்வாகம்

'நம் நாடு' தின இதழின் நிர்வாகம் உள்ளிட்ட எல்லா வித பொறுப்புகளைக் கவனித்து வரவும், முடிவுகள் எடுக்கவும் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய குழுவை இச் செயற் குழு அமைக்கிறது:

மு. கருணாநிதி
கே. ஏ. மதியழகன்
சி. பி. சிற்றரசு
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

4. சட்ட-திட்டக் குழு

கழகம் அடைந்து வரும் வளர்ச்சியையும், அதற்கேற்ப கிளைக் கழகங்களின் நிர்வாகிகள் அறிவித்துவரும் ஆலோசனைகளையும் அடிப்படையாகக் கொண்டு கழகச் சட்ட—திட்டத்தைத் திருத்தவும், மாற்றவும், விரிவு படுத்தவும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் அமைப்பாளராகவும், தோழர்கள்,

ஈ. வே. கி. சம்பத்
மு. கருணாநிதி
வி. பி. இராமன்
இரா. செழியன்

ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட குழுவை இச்செயற்குழு அமைப்பதுடன், அடுத்த செயற்குழுக் கூட்டத்திற்குள் சட்ட—திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்றும் இக்குழு கேட்டுக் கொள்கிறது.

5. தூத்துக்குடி இடைத் தேர்தல்

அண்மையில், தூத்துக்குடியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் கழகம் கலந்து கொள்வது குறித்து, நிலைமைகளைக் கண்டறிய பொதுச் செயலாளர் அவர்களும், தோழர்கள் ஈ. வே. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரும், சூன் திங்கள் 22-ம் நாளன்று தூத்துக்குடிக்குச் சென்று, கழகத் தோழர்களுடன் கலந்து பேசி விவரம் அறிவிக்குமாறு இச் செயற்குழு கேட்டுக் கொள்ளுகிறது.

6. ஏகாதிபத்திய சர்வாதிகார போக்கை எதிர்ப்போம்!

கழகத்தின் வளர்ச்சி குறித்து பொறாமையும், அச்சமும், வெறுப்பும் அடைந்துள்ள அரசியலார், அடக்குமுறைகளைக் கையாண்டு பார்க்கும் கட்டத்தை அடைந்திருப்பதை இச் செயற் குழு கவனித்து இப்பேர்ப்பட்ட ஆத்திரச் செயல்களினால், மக்களின் நம்பிக்கையினாலும், ஆதரவினாலும் வளர்ச்சி அடையும் கழகத்தை ஒடுக்கி விட முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறது.

ஏழை எளியவரின் ஆதரவை கழகம் பெரிதும் பெற்றிருப்பதைக் கண்டு சினம் கொண்ட ஆளும் கட்சியினர், அடக்குமுறைகளை, குறிப்பாக அவர்கள்மீது திருப்புவதை நாணய மற்றதாகும் என்று கருதி, மேலும் ஆட்சியாளரின் செயல்களை மறைக்கும் முயற்சியில் வழக்குகளைச் சுமத்தி வசதியில்லாதவர்களை வாட்டுவது கேவலமான செயல் என்றும் இச் செயற்குழு கருதுகிறது.

கண்ணியமான முறையிலும், அமைதியான வகையிலும் அரசியல் போராட்டங்களை நடத்தும் கழகத்தை இழிவுபடுத்துவதற்கென்றே செயல்படும் ஆட்சியாளருக்கு, எப்பேர்ப்பட்ட தூண்டுதலையும் தாங்கி, கட்டுப்பாட்டையோ, கடமையையோ கட்சித் தோழர்கள் கைவிடமாட்டார்கள் என்று தெரிவித்துக் கொண்டு, சனநாயக உரிமைகளைப் பாதுகாத்து ஏகாதிபத்திய சர்வாதிகாரப் போக்கை எதிர்க்க கழகம் என்றும் போல் இன்றும் முன்னணியில் இருக்கும் என்றும் இச் செயற்குழு தீர்மானிக்கிறது.

7. இலங்கைத் தமிழர் படும் அவதி

இலங்கையில் உள்ள சில பொறுப்பற்ற சிங்களத் தலைவர்கள் கிளப்பி விட்ட சிங்கள வெறியுணர்ச்சிக்குப் பலியாகி தமது உரிமை காக்கப் பல துன்பங்களுக்காளாகி வரும் இலங்கைத் தமிழர்களுக்கு இச் செயற் குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கைத் தமிழ்ச் சிறுபான்மையரின் உரிமைகளை மதித்து அளித்து, இலங்கையை இரத்தக் களரியிலிருந்து காக்க வெறிச் செயல்களை விடுத்து, அதனைத் தூண்டும் அரசியல் தலைவர்களைக் கண்டித்து அமைதி நிறுவ சிங்கள மக்கள் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது.

இது விஷயத்தில் இந்திய சர்க்கார், இலங்கை சர்க்காரிடம் தனது நல்லுறவைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழ்ச் சிறுபான்மையினரின் உரிமைக்கும் வாழ்வுக்கும், இதுவரை பாதுகாப்புத் தேடத் தவறியதை கண்டிப்பதுடன், உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

8. வளரும் திராவிட தேசீய உணர்ச்சி!

திராவிட தேசிய உணர்ச்சி, தமிழ்நாடு தவிர, ஆந்திர, கேரள, கருநாடக மாநிலங்களிலும் மெல்ல மெல்ல—ஆனால் உறுதியாக வளர்ந்து வருவதையும், வடநாட்டிலும் மேல் நாடுகளிலும்கூட நமது இயக்கம் குறித்து அறிவதற்கு ஏற்பட்டிருக்கும் ஆவலையும் இச் செயற்குழு மகிழ்ச்சியுடன் கவனிப்பதுடன், ஆங்கிலத்திலும், பிற திராவிட மொழிகளிலும் கழகக் கொள்கைகளை விளக்கும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதன் மூலமும், பிற வகையிலும் இயக்கக் கொள்கைகளை மேலும் பரப்புவதென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

மேலும் கழக வளர்ச்சி குறித்த சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

வெங்கிடங்கால் தி.மு. கழகக் கட்டிடத் திறப்பு விழா

10—6—58 செவ்வாய் மாலை 5 மணிக்கு

"முரசொலி" மாறன் எம். ஏ. தலைமையில்

அறிஞர் அண்ணா திறந்துவைப்பார்கள்.

மு. கருணாநிதி பேசுவார்

—தி. மு. க. வெங்கிடங்கால்

விற்பனையாகிறது !

எதிர்பார்த்த இன்ப ஏடு!
எமது புதிய வெளியீடு!!
திடுக்கிடும் சம்பவங்களைப் பின்னணியாகக்கொண்டு பின்னப்பட்ட ஒப்பற்ற துப்பறியும் நாவல்!

உயிரை வாங்கிய உயில்

(ரா. வேங்கடசாமி) விலை ரூ. 1—25

எழுதுங்கள் :—
முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை சாலை : : திருச்சி—8.

குறிப்பு:- தனிப் புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் 0—25 புதிய காசு சேர்த்து ரூ. 1—50 எம். ஓ. அனுப்புக.

இலக்கியத் தேனருவி -
ஒப்பற்ற அறிவுப் புதையல் -
புதிய எழில் பெற்று விளங்கும்
பொன்னேடு -
என்று நாடு போற்றிப் புகழும்

முத்தாரம்

இப்போது விற்பனையாகிறது!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட ரோடு, சென்னை-6, தமிழ்நாடு